
# கொள்கை

சமூக இலக்கியச் சஞ்சிகை

7-10-73 ஆசிரியர்:- புரட்சிமாறன்

தொ இல - 94

தொ இல 94



1

கலைக் குன்றம் - சம்மாந்துறை

080
37

# அறிஞர் அண்ணா அவர்களுக்கு!

மனிதன் அறியாமையில் இருந்து விடுதலை பெற்றுப் பகுத்தறிவுப் பாதையை அமைத்துக் கொள்ளவும், பொதுவுடமைத் தத்துவத்தால் மனித சமூகம் பொலிவடைந்து பொருளாதார சுபீட்சம் அடையவும், தனக்கென ஒரு கொள்கையை ஏற்படுத்திக் கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு என்னும் நெறிகளை வழிகொண்டு கலை இலக்கியப் பணிபுரிந்து வாழ்ந்து-வாழச் செய்து வாழ்வையே முடித்து அமரராகிவிட்ட அறிஞர் அண்ணா அவர்களுக்கு இக் 'கொள்கை' அர்ப்பணம்.

**கலைக் குன்றம்**

# இலக்கியப் பணிக்கு எம்மை அர்ப்பணிப்போம்

எமது நெடுங்கால வேட்கை அச்சுப் பத்திரிகை ஒன்றை மக்கள் மத்தியில் அரங்கேற்ற வேண்டும் என்பது தான். இதன் ஆரம்ப- அறிமுகப்- படலமாகவே இக் 'கொள்கை' கை எழுத்து ஏடாக உங்கள் முன் கம்பீரத்தோடு பிரவேசிக்கிறது.

இதன் இலக்குகள் - இலட்சியங்கள் என்பனவற்றை நீங்கள் காலப் போக்கில் புரிந்து கொள்வீர்கள். எனவே இங்கு விளக்கும் அவசியம் எமக்கு ஏற்படவில்லை.

எதிர்கால சமுதாயம் புதிய பல மாற்றங்களையும் எதிர்பார்த்து அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இன்றையவர்களாகிய நாம் எல்லோருமே கும்பகர்ணர்களாகத் தூங்க ஆரம்பித்து விட்டால் அந்த எதிர்காலப் போக்கு எவ்வாறு அமையும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

எமக்குள் இருக்கின்ற எந்த ஓர் ஆற்றலும் எமது இலாப நட்டங்களுக்காக மட்டும் விளைந்து கொண்டிருப்பதல்ல; அதன் மீது சுமத்தப் பட்டிருக்கும் கடமைகளைப் புரிந்து கொள்ளாமல் வாழ்ந்த காலம் இனிப் போதும்.

எண்ணங்களையும் சிந்தனைகளையும் விதைக்கின்ற இலக்கிய உழவர்களாகத் திரளுங்கள்! எல்லோருமாகச் சேர்ந்து இதமான ஓர் இலக்கியப்- பணிக்கு ஆத்ம சுத்தியுடன் எம்மை அர்ப்பணிப்போம்.

எதிரில் இருக்கின்றவைகளை- இதயத்தைத்-

தோகின்றவைகளை இலக்கியப் புடம்போட்டுப் புதிய சிந்தனைக்குக் கொண்டு வாருங்கள். இனிய கதைகளாகவும், கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் அவை பூத்துப் பொலிந்து புதியதொரு சமுதாயத்தைப் படைக்கட்டும்.

எம் பகுதியில் வளர்ந்த - வளர்ந்து கொண்டிருக்கின்ற இலக்கிய நண்பர்களின் பொறுப்பில் இக் கடமையை விட்டுவிடுகிறோம்.

என்றென்றும் உங்கள் இனிய ஆதரவை நல்கிக் கொண்டிருப்பீர்கள் என்ற நம்பிக்கையில் எமது கொள்கையின் முதலாவது இதழை அறிஞர் அண்ணாவின் இனிய நினைவாக இன்று வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இனி அடுத்த இதழில் சந்திப்போம்.

— ஆசிரியர்

---

## எழுதுங்கள்!

எமது இக் 'கொள்கை' இனிய வாசகர்களாகிய உங்களையே நம்பி வெளியிடப் படுகிறது. எனவே இதன் வளர்ச்சி சம்பந்தமான ஆலோசனைகள் - அமைப்பு சம்பந்தமான அபிப்பிராயங்கள் என்பனவற்றை எழுதுங்கள்.

கதை, கட்டுரை, கவிதை, நாடகம், செய்திகள் என்பனவும் எதிர்பார்க்கப் படுகின்றன. அனுப்பிவையுங்கள் அவசியம் பிரசுரிக்கிறோம்.

**ஆசிரியர்- 'கொள்கை',**
**கலைக்குன்றம்,**
**சம்மாந்துறை.**

# ஊதிடு சங்க நாதம்!

**கவிஞர் ஈழமேகம்**

PUBLIC LIBRARY

சோம்பலை அகற்று வீதித்
    தூங்கலை நீக்கு வீணாய்
வம்புகள் அளக்கும் வாயில்
    மண்ணொரு பிடியைப் போடு
செம்பிலே அடித்த காசைச்
    சீயென ஒதுக்கு கொள்கை
உம்பரில் உயர்வென் றெண்ணு
    ஊதிடு சங்க நாதம்!

கண்ணியம் கடமை கட்டுப்
    பாடுடன் நிஷ்க ளங்கப்
புண்ணிய வினைக ளென்றும்
    புரிந்திடு உன்னை நம்பி
மண்ணிலே கோடி கோடி
    வாழ்வதை மறந்தி டாதே
கண்ணெனப் போற்று தாயைக்
    காத்திடு நாட்டை என்றும்!

விண்ணிலே ஏறு ஏறி
    வித்திடு அங்கும் உன்னை
எண்ணரும் ஜீவ கோடி
    ஏற்றிட வாழு கொள்கைப்

புண்ணிலே ஈ எனும்பு
போக்கிடு அன்பு வெள்ளப்
பண்ணிலே உள்ளம் தோயப்
பாடிடு கவிதை நெஞ்சே!

உழைப்பவர் உதிரம் உண்டு
உயிர்பிழைக் கின்ற பேடி
குலமெனும் பெருமை காட்டிக்
குடிகெடுக் கின்ற பேடி
கற்பினைச் சூறை ஆடிக்
களிகொளும் பேடி எல்லாம்
அப்பிலே தோய்த் தடித்து
அகற்றிடு கொள்கை ஏடே!

வரிப்புலித் தோலுக் குள்ளே
வாழ்ந்திடும் கழுதை யெல்லாம்
உரித்திடு தோலை நீக்கு
உண்மையை எடுத்துக் காட்டு
திருப்பிடு சமுதா யத்தைத்
திருத்திடு கொள்கை என்ற
விரித்திடு வீர வாளை
வீசிடு உலக மெல்லாம்!

# மாண்புமிகு நோன்பு

-பாமுகில்-

வாட்டும் பசியின் கொடுமைகளை
வறியோர் துயரை உலகறிய
வீட்டில் உண்டு கொழுத்துநிதம்
வீணாய் வாழும் பேர்கட்கும்
கேட்டுப் பிச்சை வாழ்வோரின்
கொடிய பசியை உணர்த்திடவே
மாட்சி உடைய நோன்புதனை
மன்னன் இறைவன் அருள்செய்தான்!

கவலை இன்றி, பசியின்றி
கஷ்டம் எதுவும் தானின்றி
அவனியில் வாழும் செல்வர்கள்
அறிந்து பசியை ஏழையர்க்கு
புவியில் இரங்கி ஈந்திடவே
பூமான் இறையோன் அருள்செய்தான்
புவியில் வாழும் மானிடரே
பிடிப்பீர் நோன்பை, பயனதிகம்!

பதினோர் மாதம் உண்டுநிதம்
பாரில் சுகத்தை அனுபவித்து
சுதிகொண் டலைந்த மாந்தர்கள்
சுகத்தைத் தியாகம் செய்தேயின்
நதிபோல் பாயும் இறையருளை
நன்றாய்ப் பருக விதித்திட்டான்

இதனால் மக்கள் பாபமெலாம்
இறையால் பொறுக்கப் படுகிறது!

மற்ற வணக்கம் அளித்துக்கும்
'மலக்கு' மாரே கூலியினை
சற்றும் குறைவு தானின்றித்
தருகின்றார்கள்; ஆனாலோ
வற்றிக் காய்ந்த வயிற்றோடு
வணங்கி நோன்பு இருந்தமைக்கு
முற்றும் நன்மை பன்மடங்காய்
தருவோன் இறையே ஈதின்றன்!

*

# பெண்களுக்கு மட்டுமோ கற்பு?

செல்வி, ஏ.ஸி. சித்திஹாஸைமா பீ.ஏ. (லை)

நூற்றாண்டு காலமாக வழங்கி வரும் பண்டைத் தமிழ்ப் பண்பாட்டை விளக்கி நிற்கும் இலக்கியங்களும், நீதி நூல்களும் பெண்களின் கற்பு நெறிக்குட்பட்ட வாழ்க்கையைப் பற்றியும் அதன் அவசியத்தைப் பற்றியும் போற்றிப் புகழ்கின்றன. ஒரு காலத்தில் 'பரத்தையர்' சமுதாயம் தமிழ் நாட்டின் அரச அங்கீகாரம் பெற்ற சமுதாயமாக இருந்தது என்பதற்கு நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும், துறவற நெறியைப் போற்றும் மணிமேகலையும் சான்றாக அமைகின்றன. ஆயினும் இல்லற வாழ்வில் ஈடுபட்டு அற வாழ்வு வாழும் பெண்கள் தூய கற்பு நெறியை அணிகலனாய்க் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

இதற்குக் கற்புக் கரசியாகப் போற்றப்படும் கண்ணகி சான்றாக அமைகின்றாள். இவ்வாறு குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்களுக்குக் கற்பென்னும் கவசம் அணிந்திருப்பது அவசியம் என்று வலியுறுத்தும் சமுதாயம் ஏன் ஆண்களுக்கு மட்டும் அதனை வலியுறுத்தவில்லை? அல்லது ஏன் வலியுறுத்த முடியாது?

சாதி, மத, இன பேதங்களைக் கடந்து 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற அடிப்படையில் குறள் செய்த வள்ளுவப் பெருந்தகையோ "பிறனில் விழையாமை" என்ற தனி அதிகாரத்தை இல்லறவியலில் அமைத்துப் பெண்களைப் போலவே ஆண்களும் கற்புள்ளவர்களாகத் திகழ வேண்டும் என்பதை ஆணித்தரமாக நிறுவியுள்ளார். இவர் நெறிகளை ஏற்கும் எவராலும் இவ்வுண்மைகளை மறுக்கவோ மறைக்கவோ இயலாது.

"அறனியலான் இல்வாழ்வான்
என்பான் பிறனியலாள்
பெண்மை நயவாதவன்"

"பிறன்மனை நோக்காத
பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"

என்று கூறப்பட்ட இவ்வுண்மை தெட்டத் தெளிவாகின்றது.

இல்லற வாழ்வு வள்ளுவக் கண்ணோட்டத்தில் அற வாழ்க்கையாக மிளிர்கின்றது. அத்தகைய அறவாழ்வில் ஈடுபடும் ஆடவர் பிறபெண்களை அதாவது தக்குரியவள் அல்லாத பிறபெண்களை விரும்பமாட்டார்கள். இத்தகைய அறநெறியை இல்லற வாழ்வில் கடைப்பிடிப்பவனே உண்மையான இல்வாழ்வான். சமுதாயத்தில் சான்றோராகப் போற்றப்படத் தக்கவர்கள் பிறன்மனையாளை இச்சிக்காத பேராண்மையாளராக விளங்க வேண்டும். எனவே பிறன்மனை நயவாதவர்களே உண்மையில் சான்றோர் என்பது வள்ளுவர் துணிபு.

பெண்கள் மட்டும் கற்புள்ளவர்களாகத் திகழ வேண்டும் என்பது இன்றைய உலக விருப்பம். பெண்களது கற்புக்குக் களங்கம் ஏற்படும்போது இழித்துப் பே
கிறது. ஆடவர்களும் கற்புள்ளவ
களாக வாழ்ந்தால்தான் பெண்க
ளும் தங்கள் கற்பைப் பாதுகா
துக் கொள்ளலாம் என்பதை உ
லகம் உணரத் தவறிவிடுகிறது
ஆண்கள் கற்பு நெறியைப் பே
பெண்கள் மட்டும் கற்பின் வா
விடமாக அமைய வேண்டு
என்றால் பெண்களால் என்ன
செய்ய முடியும்?

சமுதாயத்தின் அடித்தள
தையே ஆட்டி வைக்கக் கூடி
பெரும் பிரச்சினைகள் இத்தகை
பக்கச் சார்பின் காரணியமாக
உண்டாகின்றன. உடனுக்குடன்
தோன்றும் மிகுக உணர்ச்சிகளி

---


## எதிர்பாருங்கள்!

எமது கலைக் குன்ற
இலக்கிய வெளியீடு,
சம்மாந்துறைக்
கவிஞர்களின்
இனிய கவிதைகளைக் கொண்ட
அருமையான
**தொகுப்பு நூல்**


---

# ஒப்பாரி

கவிஞர் மு. இராமலிங்கம்

ஈரச் சுவரானேன் – நான்
இடிகரையில் மண்ணானேன்
வேலி விறகானேன் – நான்
வேடர்கையில் அம்பானேன்.

மேப்புக் கொடியில்லை – எனக்கு
முன்பிறந்தார் தானுமில்லை;
வார்த்தைக் கொடியில்லை – எனக்கு
வளமை சொல்லப் பேருமில்லை.

ஆற நிழலுமில்லை – என்னை
ஆதரிப்பார் தானுமில்லை

பறக்கச் சிறகுமில்லை – எனக்கும்
பறந்திருக்கக் கொப்புமில்லை
இருக்க இடமில்லை – எனக்கு
இருந்தாற நிழலுமில்லை.

இன்றெரிந்த வெயிலினிலே – நான்
இன்றுமுச்சாய் நின்றேனும்
ஏனென்று கேட்பாரார் – என்னை
ஏறெடுத்துப் பார்ப்பாரார்

பார்த்தால் மனிதரென்னி - நான்
பண்ணிவைத்த பாவையல்லோ
கேட்டால் மனிதரென்னி - நான்
கேடகத்திற் பாவையல்லோ

கட்டக் கயிறெடுப்பர் - எனக்குக்
கருங்காலிப் பொல்லெடுப்பர்
அடிக்கத் தடியெடுப்பர் - என்னை
ஆகடியஞ் செய்திடுவர்

பொல்லெடுப்பார் எல்லோர்க்கும் - நான்
பொறுதி சொல்லி நிற்கின்றேன்
கல்லெடுப்பார் எல்லோர்க்கும் - நான்
கையெடுத்து நிற்கிறேனே!

பாவி படுந்துயரம் - இங்கு
பார்க்க முடியாதே
தோழி படுந்துயரம் - இங்கு
சொல்லியும் முடியாதே!

# பசி

ஐ.சாமிநாதன்

ஓநாய்க்கு ஞானம் வந்தது. பசி மிகுதியால் கண்கள் பூத்து வழி தவறி - வயிறு சுருங்கித் தளர் நடையிட்டு போகும் வழி தெரியாமல் நடக்கும்போதே, ஒரேயடியாகப் போய்விடப் போகிற வழி தெரிந்தபோது ஞானம் வந்தது.

தினமும் அது தனக்காகச் சாக அடித்தாலும் அது சாவைப் பற்றி நினைத்ததில்லை. எதற்காக அது மற்றவற்றைச் சாக அடித்ததோ அந்த வயிறோ இப்போது இதை....

சோறு போடும் வரையில் - தான் வயிறுக்கு நன்றி. இந்த வயிற்றை நம்பி வாழ்ந்தோமே - என்று நினைத்து அந்தப் பொட்டற் காட்டில் அந்த ஓநாய் தள்ளாடிச் சென்று கொண்டிருந்த போது "அம்மா... அம்மா..." என்று யாரோ முனகும் குரல் கேட்டது.

ஞானம் பெற்ற ஓநாய் பரிவுடன் ஓசை வந்த இடத்திற்கு வந்தது. அங்கே இருந்த பாழடைந்த கிணற்றிலிருந்து ஓசை வந்தது.

சுவர் இல்லாத மொட்டைக் கிணறு, நீர் இல்லாத வெறும் கிணறு. ஓநாய் மெல்ல எட்டிப் பார்த்தது.

அந்தக் கிணற்றினுள்ளே ஆடு ஒன்று விழுந்திருந்தது. "நீ எப்படி அங்கே விழுந்தாய்?" - என்று அளவற்ற பரிவுடன் ஆட்டை வினவியது.

"ஓநாயா இப்படிப் பரிவுடன் பேசுவது?" என்று ஆடு வியப்புடன் பார்த்தது.

"நான் வழி தவறி இங்கே - வந்தேன். அதுபோதாதென்று கண்தெரியாமல் கிணற்றிலும் விழுந்துவிட்டேன். விழுந்து இரண்டு நாளாகின்றன." என்று சொன்னது.

"உனக்குக் கஷ்டம் வந்தது நல்லதே. இப்படிப் பசிக்கும்போது உண்மையான ஞானம் வரும். நானும் என்னைக் குறித்தே

என் வயிற்றைக் குவிக்கத் தினம் எண்ணி வந்தேன். உன்னைப் போல நானும் வழி தவறி வந்து பசித்து அலையும் போது இதுவரை நான் செய்து வந்த கொடுமையை நினைத்து நினைத்து....." ஓநாய் அழுதது. கண்ணீர் ஆட்டின் மேல் விழுந்தது.

ஆடு சொல்லியது; "அழாதே. உனக்கு நல்ல புத்தி வந்ததே என்று எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. நீயும் இந்தக் கிணற்றில் குதித்துவிடு. நாம் இருவருமே சேர்ந்து உயிர்விடுவோம். உலகத்துக்கே இது ஓர் உதாரணமாக இருக்கட்டும்." என்றது.

இதைக் கேட்டு ஓநாய் சற்றுத் தயங்கியது. அப்போது அந்தக் கிணற்றின் அருகில் யாரோ எப்போதோ விட்டுச் சென்றிருந்த பழைய கயிறு அதன் கண்ணில் பட்டது. உடனே சந்தோஷத்துடன், "பார், ஞானம் வந்தால் உடனே ஆண்டவன் அருள் செய்வான். கிணற்றருகில் ஒரு கயிறு இருக்கிறது. அதை மெல்ல உள்ளே விடுகின்றேன். அதை நன்கு உடலில் சுற்றிக் கொள். நான் மெது[illegible] சுடன் இழுத்து உன்னை வெளியே கொண்டு வந்து விடுகிறேன்" என்றது. ஆடு "சரி" என்றது.

ஓநாய் ஜாக்கிரதையாகக் கயிற்றைவிட்டு ஆட்டைப் பிடித்துக் கொள்ளச் செய்து அதை வெளியே கொணர்ந்து ஏற்கனவே உள்ள பசியுடன் இதை இழுத்த அயர்ச்சியும் சேர்ந்து ஓநாய் மயக்கமடைந்தது. ஆடு வெளியே மயங்கி விழுந்தது.

ஓநாய் கண்ணை விழித்தது. ஆடும் கண்ணை விழித்தது. "ப[illegible] குழியில் விழுந்து சாவதைவிட இப்படி வெளியே வந்து சாவது எவ்வளவு மேல். எந்தக் கயிறு தடுக்கி உள்ளே விழுந்தேனோ அதுவே என்னை வெளியே கொண்டு வந்தது. உனக்கு நன்றி" என்றது ஆடு.

"ஆமாம், நாம் இரண்டு பேரும் சேர்ந்து நம் வாழ்வை முடித்துக் கொள்வோம்" என்று சொல்லி ஓநாய் ஆட்டைப் பார்த்தது. ஆடு தூரத்தில் இருந்தபோது ஓநாயின் ஞானம் ஆட்டைப் பார்த்தது. அது பக்கத்தில் வந்தவுடன் வயிறு பார்த்தது. உடனே அந்த ஓநாய் ஆட்டின்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. ஆடு திடுக்கிடவில்லை. திடுக்கிடுவதற்கு ஆடு இல்லை.

வயிறு, வயிறு, வயிறு. ஓநாயின் வயிறும் ஆடும் சேர்ந்தன. பெரிய ஏப்பம் வந்தது.

"அப்பாடா! நான் பள்ளத்தில் பசிக்கு ஆசைப்பட்டுக் குதித்திருந்தால் ஆட்டைத் தின்றும் வெளியே வர முடியாமல் செத்திருப்பேன். பசியினால் ஞானம் பெற்று அதனுடன் நல்ல வார்த்தை பேசியதனால் அதுவும் வெளியே வந்தது. நாங்கள் இருவரும் சேர்ந்து சாவதைவிட அது என்னோடு சேர்ந்து நான் வாழ்வது எவ்வளவு மேல்! என்னுடன் பிறந்த ஞானமும் என்னைக் கை விட்டுவிடுமோ?" வயிறு நிறைந்த ஓநாய் தெம்புடன் நடந்தது.

## அடுத்த இதழில்!

தமிழில் அறுபத்தி நான்கு கலைகளின் விபரங்களையும் தெரிந்து கொள்ளுங்கள்.

## எதிர்பாருங்கள்!

மௌலவி ஏ.ஸி.ஏ.எம். புஹாரி
அவர்கள் எழுதும்
'மறமாக்கள் மத்தியில்
மாமறை'
இனிய கட்டுரை.

★

ஆனந்தன் அவர்கள்
எழுதும்
'மருதூர்க்கனியின்
படைப்புகள் பற்றி
ஒரு கண்ணோட்டம்'

★

எடுத்துக்காட்டு!

★

எழுத்தாளர்
அறிமுகம்

★

பண்டிதன் பதில்

★

இன்னும் பல
இலக்கியப்
புதுமைகள்!

## குமுறல்

'சொர்க்கம்' என்ற
வேத சுருதியினை
மீட்டும்,
வர்க்க நாதம்
ஒன்று
வானில் கிளம்பிற்று!

இதய வீணையை
இசைத்து ஓர்
ஏழை
நரகில் மிதந்து
அழுந்தி
நாதத்தை நோக்குகின்றான்!

எட்டாத தூரம்
இருந்து மறுகும்
"சொர்க்கம்,"
கிட்டாதோ என்று
கிளர்ந்து
வானை உடைக்கின்றான்!

மாறன்-யூ.செயின்

## குட்டிக்கதை

தொகுப்பு
கு. அழகிரிசாமி

### அற்புதமான இரவு

ஒரு மூடனுக்குக் கல்யாணம் நடந்தது. அன்றிரவு அவன் ஜன்னல்களைத் திறந்து வைத்துக் கொண்டு விடியும்வரை வெளியிலேயே பார்த்துக் கொண்டிருந்தான். அன்றைய இரவுதான் அவன் வாழ்க்கையிலேயே அற்புதமான இரவாக இருக்குமென்று அவனுடைய தாயார் அவனிடத்தில் ஏற்கனவே சொல்லியிருந்ததுதான் காரணம்! இரவையே பார்த்துக் கொண்டு இரவைக் கழித்தான்.

### நல்ல தீக்குச்சி

ஒரு மூடன் தீக்குச்சியை உரசி சிகரெட்டைப் பற்றவைக்க முயன்றான். ஒரு குச்சியை உரசினான். அது பற்றவே இல்லை. அதைக் கீழே போட்டுவிட்டு மற்றொரு குச்சியை உரசினான். அதுவும் பற்றவே இல்லை. அதையும் கீழே போட்டுவிட்டு மூன்றாவதாக ஒரு குச்சியை எடுத்து உரசினான். அது எரிந்தது. உடனே சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான். அந்தத் தீக்குச்சியை ஊதி அணைத்தான். கீழே போடாமல் அதைச் சட்டைப் பையிலேயே போட்டுக் கொண்டான்.

"அதை ஏன் சட்டைப் பையிலே போட்டுக் கொண்டாய்?" என்று ஒருவன் கேட்டான்.

"இது நல்ல தீக்குச்சியாக இருக்கிறது. இன்னொரு சமயம் இதை உபயோகித்துக் கொள்ளலாம்" என்றான் மூடன்.

### பாதி விலை

ஒரு மூடனைப் பார்த்து அவன் மனைவி ஒரு ஐஸ் கட்டியை விலைக்கு வாங்கி வரும்படி சொல்லி அனுப்பினாள். வாளியோடு கடைக்குப் போன மூடன், சிறிது நேரத்தில் வாளி நிறையத் தண்ணீரோடு வீடு திரும்பினான். "பார்த்தாயா இது உருகிய ஐஸ் கட்டி. பாதி விலைக்கு வாங்கி வந்து விட்டேன். என்று பெருமையோடு சொன்னான்.

·○✶❀✶○·

# மாமியார் மான்மியம்

நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
பொன்னென உனைப்பெற்றே வீட்டினில்
பூட்டி வைத்திடும் உன் அன்னைக்குப்
புத்தி உண்டோ?
பூதமோ? நானென்ன பூச்சாண்டியோ?
உனைப்பிடித்து விழுங்கிடும் பேய்ச்சாதியோ?
பாதையில் எனைக் கண்டதும்
பதை பதைத்துன்னை அழைத்திடும்
தாயவளுக்கென்ன சித்தத் தடுமாற்றம்
ஏதேனும் உள்ளதோ?
காதலைத் தடுத்திடும் எண்ணமோ?- அந்தக்
காரியம் அவளுக்குக் கைகூடுமோ?
பூதலம் மீதிலே காதலே உன்னத
பொருள்களில் பெரிதெனச் சொல்லடி!
சட்டங்கள் போட்டிடும் வேலையைச்
சட்டென நிறுத்திடச் சொல்லடி! அவள்
திட்டங்கள் பொடிப்பொடி யாகிடும்
திட்டம் ஒன்றினைத் தீட்டுவோம்!

வீ.ஏ.வாகீசன்

# சாத்திவிடு இதயத்தை!

மன்சூர் ஏ. காதர்

எத்தனையோ பேரிருந்தும் - நீ
ஏன் பெண்ணே எனைக் கண்ணால்
குத்துகிறாய் கொல்லுகிறாய்!
கோதையே இது முறையா?
இத்தரையில் நாங்களெலாம்
இழிசாதி யாயுள்ளோம் - உனைப்
பெற்றவர்கள் கேள்வியுற்றால்
பிய்த்தெறிவர் எனைமண்ணில்!

நாங்களெலாம் கீழ்சாதி - இது
நாகரிக உலகநீதி
நீங்களெலாம் மேல்சாதி
நியதியிது இங்கிருக்க
எப்படி நீ எனைமணப்பாய்
இஃது நடை பெற்றிடுமோ? - நான்
செப்புதலை உணர்ந்திடுவாய்
செவ்விதழே எனைமறப்பாய்!

நிழலுருவைக் கிழித்துவிடு - என்
நிழலுருவை விரும்பாதே
நிழலுருவாய் உன்னுளத்தே
நின்றிருக்கும் எனைவிரட்டு

நிழலுடுகொள் நம்முறவு
நிசமல்ல ஆகவினால் — காதல்
கனவிடுங்கி எறிந்துவிடு
கஷ்டத்தைக் களைந்துவிடு

இல்லையேல் கஷ்டம் — நம்
இருவருக்கும் ஏற்படுமே
தொல்லைகள் நிறைந்ததது
தொடர்கதையாய்... சோகமதாய்...
எவ்வுயிலும் லாவருத்தம்
ஏற்படுமே ஆதலினால் — நீ
தள்ளிவிடு என்னை வெளியே
சாத்திவிடு இதயத்தை!

# பலதும் பத்தும்

## அல்-மர்ஜான் தமிழ்க் கலா மன்றம்

சம்மாந்துறை அல்-மர்ஜான் வித்தியாலயத்தில் இதுகாலவரை இயங்கிவந்த 'கவின்கலை மன்றம்' கல்வியமைச்சின் புதிய திட்டத்திற்கிணங்கக் 'கலா மன்றமாக' மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபரின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட மேற்படி தமிழ்க் கலா மன்றத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: எம். எல். எம். மீராலெவ்வை (அதிபர்), சிரேட்ட தலைவர்: ஆசிரியர் யூ. செயின், சிரேட்ட உபதலைவர்: ஆசிரியை பா. இராசம்மா, சிரேட்ட தனாதிகாரி: ஆசிரியர் எம். எல். அலியார், மாணவ தலைவர்: மு. சு. இப்றாலெவ்வை, உபதலைவர்: ஐ. எம். இஸ்மாயீல், செயலாளர்: அ. ற. மு. தௌபீக், உபசெயலாளர்: மீ. நபீலா, கனிட்ட தனாதிகாரி: ஆ. அப்துல் மஜீது, இசைக்குழுத் தலைவர்: ஆ. மு. மக்பூல், நடனக்குழுத் தலைவர்: க. லெ. ற. சித்தி, சித்திரக் குழுத் தலைவர்: இ. ஆதம்பாவா, நாடகக் குழுத் தலைவர்: அ. மஜீது லெவ்வை, உறுப்பினர்: ஆ. கதீஜா, மு. அ. அகமது சித்தீக், மு. ஜௌபர், ஆ. மு. இஸ்மாயீல், மு. சித்தி பஷீறு, மீ. கலீலுர் றஹ்மான், அ. வெள்ளச்சி.

---*---

## வானொலி விவசாய விழா

அட்டாளைச் சேனை ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் சென்ற 21.1.73 வானொலி-விவசாய விழா அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவில் சம்மாந்துறை அல்-மர்ஜான் வித்தியாலயத் தமிழ்க் கலா மன்றத்தின்

'உழைக்கும் கரங்கள்', நாற்று நடல் ஆகிய நாடக-நடனங்களும், அல்-மர்ஜான் வித்தியாலயப் பழைய மாணவர்களின் 'நினைவு நிறைவேறியது' எனும் நாடகமும் இடம்பெற்றன.

-----*-----

## சமூக நாடகம்

சம்மாந்துறைக் 'கலைக் குன்றம்' அடுத்த மாதத்தில் அருமையான ஒரு சமூக நாடகத்தை அரங்கேற்ற இருக்கிறது. இதுகாலவரை அரங்கேறிய நாடகங்களை விட இந்த நாடகம் அருமையாகவும், புதுமையாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

-----*-----

## பொதுநூல் நிலையம்

சம்மாந்துறைப் பட்டின ஆட்சி மன்றத்தினர் பொது நூல் நிலயத்திற்கான அழகிய ஒரு தனிக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு எண்ணி உள்ளனர். இந்த அழகிய கட்டிடம் ஆற்றங்கரைப் பகுதிக் காத்துவாக்கில் அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலக்கிய நண்பர்களே!

எம்பகுதியில் வாழும் எழுத்தறியாக் கவிஞர்களின் இதயங்களில் பொங்கி எழும் இன்பக் கவிகளைத் தேடித் திரட்டித் தேனை தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டு வைக்க எம் 'கலைக் குன்றம்' மேலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதுகாலவரை ஏறக்குறைய இரண்டாயிரம் பாடல்கள் திரட்டப்பட்டுள்ளன.

இந்த இனிய முயற்சிக்கு எமது இலக்கிய நண்பர்களின் புனிதமான ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கிறோம்.

நீங்கள் தெரிந்து வைத்திருக்கின்ற இனிய கவிகள் பலவற்றையும் எமக்கு அனுப்பி வைத்துதவுவதன் மூலம் புனித ஓர் இலக்கியப் பணியை எம் சமூகத்திற்காகப் புரிகிறோம் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

'கலைக் குன்றம்'
சம்மாந்துறை.